டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.03.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 210 - Madurai | Online Edition

# பொருளாதார வளர்ச்சியை நீடிக்கச் செய்தல் மற்றும் வலுப்படுத்துதல் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கு

## பிரதமர் நரேந்திர மோடி உரை

புது தில்லி, மார்ச் 3

பொருளாதார வளர்ச்சியை நீடிக்கச் செய்தல் மற்றும் வலுப்படுத்துதல் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இரண்டாம் கட்ட இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று உரையாற்றினார். முதலாவது இணையவழிக் கருத் தரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது என்று குறிப்பிட்ட பிரதமர், பட்ஜெட் அம்சங்களை அமல்படுத்துவது தொடர்பாக மிகச் சிறந்த ஆலோசனைகள் அதில் பெறப்பட்டதாக தெரிவித்தார்.

அதிக கட்டமைப்பு, அதிக உற்பத்தி, அதிக இணைப்பு, அதிக ஏற்றுமதி என்ற மந்திரங்களை வலியுறுத்திய பிரதமர் அரசின் தெளிவான தொலைநோக்குப் பார்வையையும் தீர்மானத்தையும் உறுதி செய்தார். பொருள் உற்பத்தி, பொருள் போக்குவரத்து, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், நகர்ப்புற மையங்கள் ஆகியவை தனிப்பட்டவை அல்ல, ஒற்றைப் பொருளாதார கட்டமைப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட தூண்கள் அவை என்று பிரதமர் விவரித்தார்.

கொள்கை வழிகாட்டுதல் மட்டும் பயன்களைத் தராது என்று எச்சரித்த பிரதமர், தொழில்துறை, நிதி நிறுவனங்கள், மாநில அரசுகள் ஆகியவற்றின் தீவிர பங்கேற்பு இல்லாமல் நல்ல விளைவுகள் இருக்காது என்றார். பொருள் உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தி மற்றும் செலவு என்பது போட்டித் தன்மையோடு இருப்பது குறித்த விவாதங்களுக்கு பங்கேற்பாளர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். இத்திசையில் உங்களின் ஆலோசனைகள் நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் சென்றடையும் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை என்ற மோடி கூறினார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து பேசிய பிரதமர், இந்த ஒப்பந்தங்கள் பெருமளவு வாய்ப்புகளை வழங்கியிருப்பதாகவும் தரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்தியத் தொழில்துறையின் பொறுப்பை அவை புதுப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். பயன் பாட்டுக்கு உகந்த பொருட்களை உருவாக்குவது குறித்து சர்வதேச நுகர்வோரின் தேவை மற்றும் வசதி பற்றி ஆய்வு மேற்கொள்வது அவசியம் என்பதை அவர் வலியுறுத்தினார். அதிவேக ரயில், பல்வகை போக்குவரத்து முறை, கப்பல் பழுதுபார்க்கும் அமைப்புகள் ஆகியவற்றின் விரிவாக்கம் திறமைக்கான முக்கிய படிகளாகும் என்பதை எடுத்துரைத்த பிரதமர், இதற்கேற்ப தொழில் துறையினரும் முதலீட்டாளர்களும் தங்களின் உத்திகளை வகுக்கும் போது மட்டுமே, உள்கட்டமைப்பின் உண்மையான பயனை உணரமுடியும் என்றார்.

# உழவர் நல சேவை மையத்தில் ஆய்வு




பெரம்பலூர், மார்ச் 3

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்ட வேளாண்மை படிப்பு, தோட்டக்கலை படிப்பு, படித்த பட்டதாரிகளுக்காக உழவர் நல சேவை மையம் தொடங்கப்பட்டது. இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் 11 உழவர் நல சேவை மையம் தொடங்கப்பட்டது. அதில் ஆலம்பாடியில் உள்ள உழவர் நல சேவை மையத்தை வேளாண்மை துணை இயக்குனர் இந்திராணி, வேளாண்மை துணை இயக்குனர் வேளாண்மை வணிகம் தெய்வீகன், வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் தர கட்டுப்பாடு சண்முகசுந்தரம் ஆகியோர்கள் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது உழவர் நல சேவை மையம் மையத்தினை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதை பற்றியும் விவசாயி களுக்கு தேவையான இடுபொருள்களான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய தொழில் நுட்பங்களை விவசாயி களுக்கு, தொழில்நுட்பத்துடன் பரிந்துரை செய்து, விவசாயிகளின் இடுபொருள் செலவை குறைத்து, அதிக வருமானம் பெரும் வகையில் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பலாவில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பற்றிய உள்வளாக பயிற்சி



கடலூர், மார்ச் 3

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலத்தில் பலாவில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பற்றிய உள்வளாக பயிற்சி 03.03.26 அன்று நடைப்பெற்றது.

இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம், திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, தமிழ்நாட்டில் பலா சாகுபடி குறித்தும் மற்றும் பலாவின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு விளக்கினார்.

இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின், விரிவாக்க துறை தலைவர் முனைவர் செந்தில்குமார், பலாவிற்கான மண்ணின் வளம், பலாவில் சாகுபடி குறிப்புகள் மற்றும் பலாவில் மதிப்பூட்டப்பபட்ட பொருட்கள் பற்றி தெளிவாக விளக்கினார். முனைவர் சு.கண்ணன் (உணவியல் துறை), பலாவில் பலாக் கொட்டை மாவு, பலா பூ, பலாக் கூழ், பலா வற்றல், பலா சிப்ஸ், பலாப் பழபார், உலர்ந்த கொட்டை, பலா உப்பு சக்கை, பலா முறுக்கு, பலா அல்வா, பலா ஜாம் போன்ற பல மதிப்பூட்டப்பபட்ட பொருட்கள் பற்றி விரிவாக விளக்கினார். ஒய்வு பெற்ற இணை இயக்குநர் ஹரிதாஸ், பலாவில் மதிப்பு கூட்டப்பபட்ட பொருட்கள் மற்றும் பலா தாய் மர பண்ணை அமைக்கும் முறை பற்றியும் தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் இப்பயிற்சியில் முனைவர் சத்தியநாராயணன், முனைவர் சு ஜெய்வேலு, முனைவர் ஜெயக்குமார் மற்றும் முனைவர் கலைச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கெ ாண்டு பயன்பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அறுவடை செய்யப்பட்ட தானியங்களை உரிய ஈரப்பதத்தில் சேமிக்க அறிவுறுத்தல்

விதை ஈரப்பதம் என்பது விதையானது ஈர்த்து வைத்துள்ள தண்ணீரின் அளவு ஆகும். விதையின் ஈரப்பதம் சதவீதத்தில் குறிப்பிடப்படுகிறது. விதை ஈரப்பதம் ஒரு விதையின் முளைப்புத் திறன், விதை கெடுதல், பூச்சித் தாக்குதல் மற்றும் அதிகபட்ச சேமிப்பு காலம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. விதையின் ஈரப்பதம் மிக அதிகம் இருந்தால் விதையின் முளைப்புத்திறன், சேமிப்புக்கான கால அளவு குறைதல், பூஞ்சானம் மற்றும் பூச்சித் தாக்குதல் ஆகியவற்றால் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, விதையின் ஈரப்பதத்தை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவில் சேமித்து வைக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் அதிகரிக்கும் போது விதைத்தரத்தை முடிவு செய்யும் முக்கிய காரணியான விதை முளைப்புத்திறன் குறையும்.

நெல் பயிருக்கு 13 சதவீதமும், சிறுதானியங்களுக்கு 12 சதவீதமும், பயறு வகைகள், நிலக்கடலை, சூரியகாந்தி மற்றும் எள் பயிர்களுக்கு 9 சதவீதமும், பருத்திக்கு 10 சதவீதமும் விதைப் பயன்பாட்டிற்கு அதிகபட்ச ஈரப்பதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் விதைகளை நன்கு உலர்த்தி விதையின் ஈரப்பதத்தை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவிற்குள் சேமித்து வைக்க வேண்டும்.

பயிர் அறுவடையின் போது தானியங்களின் விலையானது சந்தையில் சற்று குறைவாகக் கிடைக்கும். இவ்வாறு சரியான ஈரப்பதத்தில் சேமித்து தானியத்தின் தேவை அதிகரிக்கும் பொழுது விற்பனை செய்தால் கூடுதல் விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, விவசாயிகள் விதை ஈரப்பதத்தை அறிந்து சேமித்து பயன்பெற வேண்டும். மேலும், விதையின் ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறனை அறிந்து கொள்ள விருதுநகர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி தங்களது விதையின் ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறனை அறிந்து பயன்பெறுமாறு மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கோடை காலத்திற்கு ஏற்ற வேளாண் சாகுபடி – ஓர் பார்வை



கோடை காலத்தில் (மார்ச்–மே) குறைந்த நீர் தேவையுடன் அதிக லாபம் தரும் பயிர்களான தர்பூசணி, முலாம் பழம், பாசிப்பயறு, எள், கம்பு மற்றும் காய்கறிகளை (வெண்டை, கத்தரி) பயிரிடலாம். நிலத்தடி நீர் இருப்பைப் பொறுத்து சாகுபடி மேற்கொள்வது சிறந்தது. கோடை உழவு (புழுதி உழவு) செய்வதன் மூலம் மண் வளம் கூடி பூச்சிகள் மற்றும் களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**முக்கிய பயிர்கள்**

**பழப் பயிர்கள் :** தர்பூசணி, முலாம் பழம் (அதிக தேவை மற்றும் வருவாய் தரும்).

**தானியங்கள் & பயறு வகைகள் :** பாசிப்பயறு, உளுந்து, எள், கம்பு.

**காய்கறிகள் :** வெண்டை, கத்தரி, தக்காளி, வெள்ளரி, மிளகாய்.

**பூக்கள் :** சூரியகாந்தி, செம்பருத்தி, ஜின்னியா, மல்லிகை.

**கோடை உழவு :** மார்ச்–ஏப்ரலில் புழுதி உழவு செய்வதன் மூலம் மண் காற்றோட்டம் அதிகரித்து மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

**நீர் மேலாண்மை :** சொட்டு நீர் அல்லது தெளிப்பு நீர் பாசன முறைகளைப் பயன்படுத்தி நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்தலாம்.

**மூடாக்கு போடுதல் :** மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைக்க வைக்கோல் அல்லது காய்ந்த இலைகளைக் கொண்டு மூடாக்கு இடலாம்.

**நிழல் வலை :** நாற்றங்கால்களுக்கு நிழல் வலை (Shade net) அமைத்து வெயிலின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

ஏப்ரல் மாதத்தில் நிலத்தடி நீர் வேகமாக வற்றுவதால் அதற்கு முன்பே குறுகிய காலப் பயிர்களைத் தேர்ந்தெடுத்து அறுவடை செய்வது நல்லது.

கட்டுரை தொகுப்பு : **வீரபாண்டி கே.எஸ்.பழனிசாமி, மாநில திட்ட பொறுப்பாளர் (ICAR).**

# மக்காச்சோளம் மற்றும் சோளப் பயிரில் விதை கடினப்படுத்தல் முறையைப் பற்றிய கள விளக்க நிகழ்வை நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி நாக நந்தினி பா, தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) இன் ஒரு பகுதியாக, தே.கல்லுப்பட்டி வட்டாரம், வே. வெங்கடாசலபுரம் கிராமத்தில் மக்கா சோளம் மற்றும் சோளப் பயிரில் விதை கடினப்படுத்தல் (Seed Hardening) முறையைப் பற்றிய களவிளக்க நிகழ்வை நடத்தினார்.

பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் (Potassium dihydrogen phosphate) 2% கரைசலை பயன்படுத்தி விதை கடினப் படுத்தல் செய்வதன் மூலம் வறட்சித் தன்மையை எதிர்க்கும் திறனை அதிகரிக்கும் முக்கியமான தொழில் நுட்பமாகும்.

இந்த முறையால் குறைந்த ஈரப்பத நிலையிலும் விதைகள் சிறப்பாக முளைப்பதுடன் சீரான முளை உருவாகி, பயிர் விளைச்சல் சுமார் 10 சதவீதம் வரை அதிகரிக்கும். இந்த நிகழ்வில் விவசாயிகள் கலந்து கொண்டு, இத்தொழில் நுட்பத்தை நேரடியாக அறிந்து பயன் பெற்றனர்.

# மக்காச்சோளத்தில் படைப்புழு கட்டுப்பாடு குறித்து பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, மார்ச் 3

மதுரை மாவட்டம், வன்னிவேலம்பட்டி வட்டம், ஊர்மந்தை வளாகத்தில், மக்காச்சோளத்தில் தாக்கம் ஏற்படுத்தும் படைப்புழு (Fall Armyworm) பூச்சியை ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகள் மூலம் கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டது.





இப்பயிற்சி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவி ஓவியா, வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் இதை நடத்தினார். இந்த பயிற்சியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 8 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

பயிற்சியில் படைப்புழுவை அடையாளம் காணும் முறை, அதன் வாழ்நாள் சுழற்சி, பயிர் வளர்ச்சியில் ஏற்படும் சேதங்கள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், பயிர் மேலாண்மை முறைகள், இயற்கை எதிரிகள் பயன்பாடு, பெரோமோன் பொறிகள் பயன்பாடு, பாதுகாப்பான வேதியியல் மருந்துகளை சரியான அளவில் பயன்படுத்துதல் போன்ற ஒருங்கிணைந்த மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், விளக்க படங்கள் மூலம் படைப்புழு கட்டுப்பாட்டு முறைகள் படிப்படியாக விளக்கப்பட்டு, பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய முக்கிய நடைமுறைகள் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் பூச்சி தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான அறிவைப் பெற்றனர். இந்த பயிற்சி மக்காச்சோள உற்பத்தியை உயர்த்தவும், படைப்புழு தாக்குதலால் ஏற்படும் இழப்புகளை குறைக்கவும் முக்கிய பங்களிப்பாக இருக்கும் என பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.



# விவசாயிகள் பதிவிற்கு மொபைல் செயலி அறிமுகம்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

திருச்சி, மார்ச் 3

விவசாயிகள் நில உடமை பதிவு செய்து தனித்துவ அடையாள எண் பெற மொபைல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

**தனித்துவ அடையாள எண்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விவசாயிகள் மொத்தம் 1 இலட்சத்து 83 ஆயிரத்து 115 பேர் உள்ளனர். இதில் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 300 பேர் பிரதம மந்திரியின் தனித்துவ அடையாளஎண் பெற்றுள்ளனர். இம்மாவட்டத்தில் இன்னும் 49 ஆயிரத்து 815 பேர் தனித்துவ அடையாளஎண் பெறாமல் உள்ளனர். பிரதம மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் கவுரவ நிதி பெறும் விவசாயிகள் மத்திய அரசு வழங்கும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என்பதால் உடனடியாக விவசாயிகள் பதிவு செய்ய வசதியாக சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

**மொபைல் செயலி**

தமிழ்நாடு அரசு, விவசாயிகள் பதிவினை துரிதப்படுத்த மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. FARMER REGISTRY TN இச்செயலியை நில உரிமையாளர்கள் பயன் படுத்தி சிட்டா மற்றும் ஆதார் எண் உள்ளீடு செய்து தாமாகவே பதிவு செய்திடும் வகையில் எிமைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த எளிய செயலியை பயன்படுத்தி விவசாயிகள் பதிவினை செய்து கொள்ள திருச்சிராப்பள்ளி வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.




# வெண்டை பயிர் பாதுகாப்பிற்கு புதிய நடைமுறை களப்பயிற்சியில் வேளாண்மை மாணவி



மதுரை. மார்ச் 3

மதுரை, உச்சப்பட்டி கிராமத்தில் வெண்டை பயிரில் தாக்கம் ஏற்படுத்தும் Spodoptera litura (இலைத் தின்று சேதப்படுத்தும் இலைப்புழு) பூச்சியை கட்டுப்படுத்துவதற்கான விச ஈர்ப்புப் பேட் தயாரிப்பு குறித்த களப்பயிற்சி நடைபெற்றது.

**விச ஈர்ப்புப் பேட் தயாரிப்பு முறை (1 ஏக்கருக்கு)**

அரிசி / பருப்பு மாவு – 5 கிலோ
வெல்லம் – 500 கிராம்
கார்பரியல் (Carbaryl) 50% WP பூச்சிக்கொல்லி – 500 மில்லி
தண்ணீர் – 500 மில்லி

மேற்கண்ட பொருட்களை ஒன்றாக நன்கு கலந்து, மாலை நேரத்தில் வயலில் சிறு உருண்டைகளாக இட வேண்டும்.

இரவு நேரத்தில் செயலில் இருக்கும் Spodoptera litura இப்பேட்டை ஈர்க்கப்பட்டு உண்பதால், பூச்சியின் எண்ணிக்கை குறைந்து பயிர் சேதம் கட்டுப்படுத்தப்படுகிறது. இது குறைந்த செலவில் பயனளிக்கும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையாகும். மேலும் தேவையற்ற அதிகப்படியான மருந்து தெளிப்பைத் தவிர்க்க உதவுகிறது.

இந்த களப்பயிற்சியை மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு வேளாண்மை மாணவி ப.கோமதி, கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் நடத்தினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வத்துடன் செயல்பட்டு, விச ஈர்ப்புப் பேட் தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடு குறித்து தெளிவான புரிதலை பெற்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வண்ண இறால் வளர்ப்பு - நல்ல வாய்ப்பு!


வண்ண இறால்.

வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்து அறிந்த நிலையில் தற்போது புதிய வண்ண இறால்கள் (COLOUR FUL / ORNAMENTALSHRIMPS வளர்ப்பை நமக்கு கொச்சி தேசிய மீன் வள மரபணு காப்பகம் அறிமுகம் செய்துள்ளது. இது 6 வகையான வண்ண இறால் மீன்களை கடந்த 10 ஆண்டுகளாக தீவிர ஆராய்ச்சியின் விளைவாக தற்போது கண்டு பிடிக்கப்பட்டு அறிமுகம் செய்துள்ளதாக தகவல் உள்ளன.

ஏற்கனவே வண்ண மீன்கள் வளர்ப்பில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழகம் மட்டுமல்ல, லட்சத் தீவுகளிலும் இதை வளர்ப்பதற்கான சாத்திய கூறுகள் உள்ளன.

**தமிழகத்தில் எங்கெல்லாம் வளர்ப்பதற்கான சாத்திய கூறுகள் உள்ளன?**

பழவேற்காடு முதல் பிச்சாவரம் வரையிலும் தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களும் இந்த வண்ண இறால்கள் வளர்ப்பதற்கான வாய்ப்புள்ளதாக தெரிகிறது. கடல் சார் மற்றும் மீன் வளம் சார்ந்த தொழில்களில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் ஸ்டாரட் அப் நிறுவனத்தினரும் இதில் ஈடுபடலாம்.

**வண்ண இறால் காப்பகம் அமைக்க எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும். இதற்கு மானியம் உண்டா?**

இந்த வண்ண இறால் வளர்ப்பு காப்பகம் அமைக்க 2.5 லட்சம் முதல் 3.5 லட்சம் வரை முதலீடு செய்ய வேண்டியதாக உள்ளது. தனியார் மீன் வளர்ப்புக்கு மத்திய அரசு 2500 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. 'பிரதம மந்திரி மத்யஷ்யா சம்படா யோஜனா' திட்டத்தின் கீழ் வண்ண இறால்கள் வளர்ப்பதற்கான மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுகிறது.

**வண்ண இறால்களுக்கான சந்தை வாய்ப்பு எப்படி உள்ளது?**

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இதற்கான சந்தை

வாய்ப்புகள் அதிகம். வண்ண இறால்களின் ஒன்றின் ஏற்றுமதி விலை 1000-1500 ரூபாய். உள்நாட்டிலே தற்போது ஒன்றின் விலை 400-500 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 30-35 லட்சம் வரை வர்த்தகம் நடைபெறுகிறது.

ஆர்வமுள்ள தொழில் முனைவோர் கொச்சியில் உள்ள தேசிய மீன்வள மரபணு காப்பகத்தை தொடர்பு கொண்டு குஞ்சுகளையும் வளர்ப்பதற்கான தொழில்நுட்பங்களையும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**என்ன வண்ண இறால்கள் வளர்க்க நீங்க ரெடியா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மிதிபாகற்காயில் டிரைக்கோடெர்மா விதை நேர்த்தி செயல்முறை விளக்கப் பயிற்சியை நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி நாக நந்தினி பா, தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) ஒரு பகுதியாக, தே.கல்லுப்பட்டி வட்டாரம், வே.வெங்கடாசலபுரம் கிராமத்தில், மிதி பாகற்காய் விதை நேர்த்தி குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சியை நடத்தினார்.

இந்தப் பயிற்சியில், டிரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride) பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த உயிரியல் முறைக் கட்டுப்பாட்டுக் காரணிகள் பாகற்காயில் ஏற்படும் ஃபுசேரியம் வாடல் (Fusarium wilt), வேர் அழுகல் போன்ற முக்கிய பூஞ்சை நோய்களைத் தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாகும். மேலும், இந்த விதை நேர்த்தி முறையை மிளகாய், பருத்தி, தக்காளி போன்ற பயிர்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த செய்முறை விளக்கப் பயிற்சியில் பல விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# தேங்காய் மதிப்புக் கூட்டு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதியாண்டு மாணவி ஐஸ்வர்யா நாயர் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பல்லப்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்காக தேங்காய் மதிப்புக் கூட்டு (Coconut Value Addition) குறித்து பயிற்சியை நடத்தினார். இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், தேங்காய் பயிரிடும் விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு கூடுதல் மதிப்பு சேர்த்து அதிக வருமானம் பெறுவதற்கான வழிகளை எடுத்துரைப்பதாகும்.

பயிற்சியின் போது தேங்காயிலிருந்து தயாரிக்கக்கூடிய தேங்காய் எண்ணெய், தேங்காய் பால், தேங்காய் மாவு, தேங்காய் சர்க்கரை, தேங்காய் துருவல், தேங்காய் ஓடு சார்ந்த பொருட்கள், தேங்காய் நார் பயன்பாடு போன்ற மதிப்புக் கூட்டு தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், இந்தப் பொருட்களை எவ்வாறு பதப்படுத்தி சந்தைப் படுத்துவது, உள்ளூர் சந்தை மற்றும் வெளிச்சந்தை வாய்ப்புகள், சுயதொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல் களும் வழங்கப்பட்டன. மேலும், தேங்காய் மதிப்புக் கூட்டு செய்வதன் மூலம் வீட்டு அளவிலும் சிறுதொழில் முறையிலும் செயல்பட்டு, பெண்கள் மற்றும் இளைஞர்கள் தன்னிறைவு பெற முடியும் என்பதையும் பயிற்சியில் வலியுறுத்தப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றனர். இந்த பயிற்சி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், தேங்காய் சார்ந்த தொழில்களில் புதிய நம்பிக்கையை உருவாக்கியது.

# காட்டு பன்றியால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் மேலாண்மை முறைகள் குறித்து பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி நாக நந்தினி பா., தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) இன் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம்,



வே.வெங்கடாசலபுரம் கிராமத்தில் மக்காசோளப் பயிரில் காட்டு பன்றிகளால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.



இப்பயிற்சியில், காட்டு பன்றிகளைத் தடுக்கும் வாசனை விரட்டிகள் தயாரிக்கும் செய்முறை குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், இரசாயன அடிப்படையிலான விலங்கு விரட்டிகள் (Chemical Animal Repellents) பயன்படுத்தும் முறை மற்றும் அவற்றின் பாதுகாப்பான பயன்பாடு பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

வாசனை விரட்டிக் கரைசல் தயாரிக்கும் முறையாக, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 மில்லி முட்டைக் கரைசலைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும் என்று கூறப்பட்டது. தயாரிக்கப்பட்ட இந்தக் கரைசலைப் பயிர்களின் மேல் அல்லது வயலைச் சுற்றியுள்ள நிலப்பகுதிகளில் சமமாகத் தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இந்தக் கரைசல், பயிர்களிலிருந்து வெளிப்படும் வாசனையை மறைத்து, காட்டு பன்றிகள் வயலில் நுழைவதைத் தடுக்க உதவுகிறது. சிறந்த பலனைப் பெற, 10 நாட்களுக்கு ஒரு முறை தொடர்ந்து இந்தக் கரைசலைத் தெளிக்க வேண்டும் என்றும் மாணவி பரிந்துரைத்தார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இத்தகைய எளிய மற்றும் செலவுக் குறைந்த மேலாண்மை முறைகள் தங்களின் விளைச்சலைப் பாதுகாக்க உதவும் என நன்றியைத் தெரிவித்தனர்.



# வேளாண்மை கல்லூரி மாணவர்களின் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி மற்றும் வேளாண்மை பயிலரங்கு



மதுரை, மார்ச் 3

மதுரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மாணவர்கள், கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, செல்லம்பட்டி குழுவாக தீனா விளக்கு கிராமத்திற்கு பயணம் செய்து இயற்கை வேளாண்மை குறித்து விரிவான அறிவைப் பெற்றனர்.

இப்பயணத்தின் போது, இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கி வரும் கருணாகரன் (அல்லது அலெக்ஸ்) மாணவர் களை வரவேற்று, தமது பண்ணையில் நடைமுறையில் செயல் படுத்தி வரும் பல்வேறு இயற்கை முறைகளை விளக்கமாக எடுத்துரைத்தார். அவரது பண்ணையில் வாழை, கத்திரிக்காய், தக்காளி, எலுமிச்சை, பல்வேறு மருத்துவ மூலிகைகள், தேக்கு மற்றும் சந்தனம் போன்ற மர வகைகள் உள்ளிட்ட பல பயிர்கள் முழுமையாக இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மண் வளத்தை பாதுகாக்கவும், செலவைக் குறைக்கவும், அவர் தானே தயாரிக்கும் ஜீவாமிர்தம், ஐந்து இலைக் கரைசல், மீன் அமினோ அமிலம், பூச்சி விரட்டி போன்ற இயற்கை உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

பயிர் பாதுகாப்பு, மண் ஆரோக்கியம், நீர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை முறைகள் குறித்து மாணவர்கள் நேரடியாக களத்தில் கற்றுக் கொண்டனர். இவ்வாய்ப்பு, மாணவர் களுக்கு இயற்கை வேளாண்மையின் முக்கியத்து வத்தையும் அதன் நடைமுறை சவால்களையும் ஆழமாகப் புரிந்து கொள்ள உதவியது.

# மல்லிகை மொட்டு புழு மேலாண்மைக்கு வேப்பங்கொட்டை கர்னல் சாறு செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்


கோயம்புத்தூர், மார்ச் 3

தெற்கு பொள்ளாச்சியில் உள்ள சூளேஸ்வரன்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் வர்சா.ச, வர்சா குமாரி.க, வர்சா பார்த்திபன், வித்யா.க, வித்ய சரண்யா.த, ரா.வினோலின் ரத்னா, விஷ்மா.மா.சி, விஷ்ணு பிரியா.செ, யுவ பிரியா.த, யுவஸ்ரீ.பீ ஆகியோர் பூச்சி தாக்கத்தை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கர்னல் சாறு (Neem Seed Kernel extract - NSKE ) பயன்பாடு குறித்த செய்முறை விளக்கத்தை நடத்தினர். மேலும் இரசாயன பூச்சிக்கொல்லிகளை தொடர்ந்து பயன் படுத்துவதால் ஏற்படும் செலவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு களுக்கு மாறாக, NSKE ஒரு பாதுகாப்பான, குறைந்த செலவிலான உரிய மேலாண்மை முறையாக இருப்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



இந்த செய்முறை விளக்கத்தில் வேளாண்மை பூச்சியியல் துறையைச் சேர்ந்த முனைவர் சுமதி, மாணவி களுடன் கலந்து கொண்டு, ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை நடை முறைகளின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விளக் கினர். இத்தகைய செயல்பாடுகள் மாணவர்களின் நடைமுறை அறிவை வளர்ப்பதுடன் விவசாயிகளுக்கும் பயனளிப்பதாக அமைகிறது என பாராட்டினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தென்னையில் வேர் ஊட்டம் பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்




திருச்சி, மார்ச் 3

திருச்சிராப்பள்ளி (சமயபுரம்) தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள் கிராமிய வேளாண்மை பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ், புள்ளம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட மால்வாய் கிராமத்தில் தென்னையில் வேர் ஊட்டம் பற்றி விவசாயிகளிடம் கூறினோம்.

## தென்னையில் வேறு ஊட்டம்

✓ ஒரு புதிய மற்றும் உயிருள்ள வேரை தேர்ந்தெடுக்கவும்

✓ தண்ணீர் 10 கிலோ+மோனோரோட்டோபாஸ் 36WC 10 கிலோ 7 X 10 cm பாலித்தீன் பையில் கரைக்கவும்

✓ பூச்சிக்கொல்லி கரைசலில் வேரை சேர்க்கவும்

✓ பருத்தி நூல் மூலம் பையை வேருடன் இறுக்கமாக பாதுகாக்கவும்.

## வேர் ஊட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள்

✓ தென்னை மரம் உயரமாக இருப்பதால் இலைகள் மீது மருந்து தெளிப்பது கடினம் வேரோட்டம் நேரடியாக செயல் படுவதால் சத்துக்கள் வினாக்காமல் மரத்தால் முழுமையாக உறிஞ்சப்படும்.

✓ ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மேம்பாடு.

✓ அதிகரித்த வளர்ச்சி மற்றும் மகசூல்.

✓ பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு.

✓ வறட்சி தாங்கும் திறன்.

✓ பயன்படுத்த எளிமை.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிரியா விவசாயிகள் பாதுகாப்பு விவசாயம் தொடர்பான தங்களின் சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டு தெரிந்து பெற்றனர்.

# வாழை பயிரில் மீன் அமினோ அமிலம் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



விருதுநகர், மார்ச் 3

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரம், செட்டிப்பட்டி கிராமத்தில் வாழை பயிரில் மீன் அமினோ அமிலம் (Fish Amino Acid) பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையில் பயிலும் மாணவி சம்யுக்தா.சு, கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் நடத்தினார்.

பரிந்துரைக்கப்பட்ட அளவு, அதன் நன்மைகள் மற்றும் வாழையில் பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார். இதனால் தாவர வளர்ச்சி, வேர் வளர்ச்சி, கொத்து உருவாக்கம் மேம்படும் என்றும் கூறினார். சரியான கரைசல் தயாரித்தல், இலைத்தெளிப்பு நேரம் மற்றும் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்த செய்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது. குறைந்த செலவில், சுற்றுச்சூழல் நட்பு உள்ளீடாக இது பயிர் செயல்திறன் மற்றும் மண் உயிரியல் செயல்பாட்டை மேம்படுத்தும் என எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு கலந்துரையாடி, இக்கள விளக்கம் பயனுள்ளதாக இருந்ததாக தெரிவித்தனர்.



# மண்புழு உரம் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி நாக நந்தினி பா., தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) இன் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், வே.ரெட்டிரப்பட்டி கிராமத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

பயிற்சியின் போது, மண்புழு உரத்தின் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினார். மண்புழு உரம் மண்ணில் இயற்கைச் சத்துகளை அதிகரித்து, கரிமப் பொருட்களின் அளவை மேம் படுத்துகிறது. இதன் மூலம் மண்ணின் வளம் உயர்ந்து, பயிர்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் அதிகரிக்கிறது.

மேலும், மண் இறுக்கத்தை (Soil Compaction) குறைத்து, நீர் ஊடுருவும் திறனை மேம்படுத்தி, வேர் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்குகிறது என்பதையும் எடுத்துரைத்தார். மண் புழு உரம் தயாரிக்கும் கட்டங்களாக படுக்கை (Bed) தயாரித்தல், மூலப்பொருட்கள் அடுக்குதல், ஈரப்பதம் பராமரித்தல், மண்பு ழுக்களை சேர்த்தல், உரம் உருவாகும் நிலைகள், பின்னர் உரத்தை வடிகட்டி (Sieving), பொதியிடுதல் மற்றும் சேமித்தல் வரை உள்ள அனைத்து கட்டங்களையும் தெளிவாக விளக்கினார். இந்த நிகழ்ச்சியில் பல விவசாயிகள் கலந்து கொண்டு ஆர்வமுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# கார்பன் கிரெடிட்ஸ் மற்றும் சமீபத்திய முன்னேற்றங்கள்

உலகம் முழுவதும் காலநிலை மாற்றம் இன்று மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. தொழிற்சாலைகள், வாகனங்கள், மின்சார உற்பத்தி மற்றும் விவசாயம் போன்ற மனித செயல் பாடுகள் காரணமாக அதிக அளவு கார்பன்டையாக்சைடு ($CO_2$) மற்றும் பிற பசுமைக்குடில் வாயுக்கள் (Greenhouse Gases)




வளிமண்டலத்தில் வெளியேறுகின்றன. இவ்வாயுக்களின் வெளியீட்டை குறைக்க உதவும் ஒரு முக்கிய கருவியாக கார்பன் கிரெடிட்ஸ் உருவாகியுள்ளது.

**கார்பன் கிரெடிட்ஸ் என்றால் என்ன?**

கார்பன் கிரெடிட் என்பது ஒரு மெட்ரிக் டன் கார்பன்டை யாக்சைடு அல்லது அதற்கு சமமான பசுமைக்குடில் வாயுக் களின் வெளியீட்டை குறைத்ததையோ அல்லது வளிமண்டலத் திலிருந்து அகற்றியதையோ குறிக்கும் சான்றிதழ் ஆகும். மாசுபாட்டைக் குறைத்ததற்கான "சுற்றுச்சூழல் சான்று" என்பதே கார்பன் கிரெடிட்.

**கார்பன் கிரெடிட்ஸ் எப்படி செயல்படுகிறது?**

மர நடுகை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (சோலார், காற்றாலை), மண் கார்பன் சேமிப்பு போன்ற திட்டங்கள் மூலம் கார்பன் வெளியீடு குறைக்கப்படுகிறது. இந்த குறைப்புகள் சரி பார்க்கப்பட்ட பிறகு, கார்பன் கிரெடிட்ஸ் வழங்கப்படுகின்றன. அதிகமாசு உமிழும் நிறுவனங்கள், தங்கள் வெளியீட்டை சமநிலைப்படுத்த (offset) இந்த கிரெடிட்ஸ்களை வாங்குகின்றன. பயன்படுத்தப்பட்ட கிரெடிட்ஸ் "ரிடையர்" (Retired) செய்யப்படு வதால், அவை மீண்டும் விற்பனை செய்ய முடியாது.

**சமீபத்திய முன்னேற்றங்கள்**

**1. உயர்தர கார்பன் கிரெடிட்ஸ் மீது அதிக கவனம்**

சமீப காலங்களில் "அளவைவிட தரம் முக்கியம்" என்ற அணுகுமுறை அதிகரித்துள்ளது. உண்மையில் மாசுபாட்டைக் குறைக்கும், நம்பகமான மற்றும் நீண்டகால பயன் தரும் திட்டங்களுக்கு அதிக மதிப்பு கிடைக்கிறது.

**2. உலகளவில் அதிகரிக்கும் பயன்பாடு**

2025-26 காலகட்டத்தில் உலகம் முழுவதும் அதிக அளவு கார்பன் கிரெடிட்ஸ் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது நிறுவனங்கள் காலநிலை மாற்றத்தை தீவிரமாக எடுத்துக் கொள்வதைக் காட்டுகிறது.

**3. இந்தியாவில் கார்பன் கிரெடிட் வர்த்தகம்**

இந்தியா கார்பன் கிரெடிட் வர்த்தகத் திட்டத்தை (Carbon Credit Trading Scheme) விரிவுபடுத்தி வருகிறது. தொழில், ஆற்றல்,

போக்குவரத்து போன்ற துறைகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இலக்குகளை எட்டாத நிறுவனங்கள் கார்பன் கிரெடிட்ஸ் வாங்க வேண்டும்.

**4. தொழில்நுட்பத்தின் பங்கு**

ப்ளாக் செயின் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் கார்பன் கிரெடிட்ஸ் வழங்கல் மற்றும் வர்த்தகம் அதிக வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுகிறது.

**5. நிறுவனங்களின் பங்கு**

பெரிய நிறுவனங்கள் நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் கார்பன் கிரெடிட்ஸ் வாங்கி வருகின்றன. இது கார்பன் சந்தையின் நம்பகத்தன்மையை உயர்த்துகிறது.

**சவால்கள்**

- சில திட்டங்கள் உண்மையான கார்பன் குறைப்ப வழங்காதது குறித்த விமர்சனங்கள்
- விதிமுறைகளில் உள்ள வேறுபாடுகள்
- முழுமையான வெளிப்படைத்தன்மை இல்லாதது

இவை இருந்தாலும், தரநிலைகள் மற்றும் கண்காணிப்பு முறைகள் நாளுக்கு நாள் மேம்பட்டு வருகின்றன.

முடிவுரை

கார்பன் கிரெடிட்ஸ் என்பது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஒரு முக்கிய சந்தை அடிப்படையிலான கருவி-யாகும். அரசு, தொழில்துறை மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட்டால், கார்பன் கிரெடிட்ஸ் மூலம் பசுமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

கட்டுரை ஆசிரியர் : **ச.திவ்யா, உதவிப்பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்), எஸ்.ஆர்.எஸ்.வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, திண்டுக்கல் மற்றும் இரா.அருண்குமார், உதவிப்பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்), ஆர்.வி.எஸ். வேளாண்மைக் கல்லூரி, தஞ்சாவூர்.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**